**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| வழக்கு எண்: M.C. 04 / 2023 | | |
|---|---|---|
| பெயர் : ரம்ஜான்கனி | ம.சா. 1 | நாள் : 04.07.2025 |

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் நடைபெற்ற 3வது நாள் சடங்கு திருமண செலவினை பெண் வீட்டாரும் மாப்பிளை வீட்டாரும் சரிசமமாக ஏற்றுக்கொள்வது இஸ்லாமிய முறைப்படி வழக்கம் என்றால் சரிதான். எனது திருமணமும் அவ்வாறு தான் நடைபெற்றது என்றால் சரிதான். எனது திருமணத்திற்கான செலவை எனது பெற்றோர்கள் செய்தார்கள் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது 2 பிள்ளைகள் பிறக்கும் வரை நான் எதிர்மனுதாரருடன் வசித்து வந்தேன் என்றால் இல்லை. எனது மாமனார், மாமியார் மற்றும் எனது கணவரின் உறவினர்கள் எந்த குறிப்பிட்ட நாளில் என்னை கொடுமை படுத்தினார்கள் என்று நான் எனது மனு மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தவறான தகவல்களுடன் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2020ம் ஆண்டு முதல் நான் கணவரிடம் இருந்து பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரிதான். இம்மனுவை 2023ம் ஆண்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இடைப்பட்ட 3 ஆண்டுகளில் எனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கோ அல்லது எனது கணவர் பிரிந்து வாழ்வது தொடர்பாக அவர் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுத்ததாகவோ எனது மனு மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் மற்றும் மாமியார் வயதாகி உடல்நிலை சரியில்லாதவர்கள் என்றால்

சரியல்ல. எனது கணவரின் மாத வருமானத்தை நிரூபிக்க உரிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2021ம் ஆண்டில் நானும் எனது கணவரும் பெரியபாளையத்தில் தனிகுடித்தனம் இருந்தோம் என்றால் சரிதான், ஆனால் 2 மாதம் தான் குடியிருந்தோம். அச்சமயத்தில் எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்து விசாரணையில் எங்கள் இருவரையும் பிரச்சனை இல்லாமல் வாழும்படி அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் எனது கணவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பணிக்கு சென்றிருந்த சமயத்தில் அவருக்கு தெரியாமல் வீட்டிலிருந்த பொருட்களை எனது அக்கா வீட்டிற்கு கொண்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை எனது 2 குழந்தைகளுக்கும் எதிர்மனுதாரர் மாதம் ரூ.13000/- செலுத்தி பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவர் அவரது பெற்றோருக்கு ஒரே மகன் என்றால் சரிதான். அவரது பெற்றோர்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பு எனது கணவருக்கு மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். எனது உறவினர்களின் பேச்சை கேட்டு கொண்டு நான் தான் தான்தோன்றி தனமாக எனது கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாக எனது கணவர் எனக்கு பராமரிப்பு தொகை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், அவ்வாறு பராமரிப்பு தொகை எனக்கு தகுதி இல்லை என்றாலும் சரியல்ல. தனது பெற்றோரின் அறிவுரைப்படி என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு எதிர்மனுதாரர் விருப்பமாக உள்ளார் என்றாலும், நான் தான் அவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் எனது விருப்பப்படி தனியாக பிரிந்து வாழ்வதால் எனக்கு பராமரிப்பு தொகை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது 2 குழந்தைகளுக்கும் எனது கணவர் மாத மாதம் பராமரிப்பு மற்றும் மருத்துவ தொகையை வழங்கி வருவதால் அவர்களுக்கும் தொகை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை

என்றால் சரியல்ல. எனவே, நான் தாக்கல் செய்த இம்மனு ஏற்கதக்கது அல்ல என்றாலும், அது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– ரம்ஜான்கனி

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.07.04 12:29:38 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி